**நீதித்துறை நடுவர் நீதிமன்றம், செஞ்சி**

முன்னிலை: திரு.R.மனோகரன், B.A.,B.L.,

குற்றவியல் நீதித்துறை நடுவர், செஞ்சி.

**வழக்கு எண். M.C.No.2/2021**

2024 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 22 ம் தேதி செவ்வாய் கிழமை குற்றம் முறையிடுபவரின் வாக்குமூலம் (1969 ஆம் ஆண்டு 54 வது விதியின் ஏற்பாட்டின்படி) உறுதிமொழி செய்விக்கப்படுகிறது.

எ.ம.சா.1

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : தமிழ்செல்வன் | தொழில் | : கூலிவேலை |
| தந்தை பெயர் | : ராஜாமணி | படிப்பு | : 10 ஆம் வகுப்பு |
| கிராமம் | :தாதிக்குளம் | | |
| வட்டம் | : மேல்மலையனூர் | சமயம் | : |
| | | சாதி | : |
| | | வயது | : 39 |

(மனுதாரர் ஆஜர் )

**குறுக்கு விசாரணை**

2. மனுதாரர் ராஜாமணி எனக்கு அப்பா என்றால் சரிதான். எனது தாயார் பெயர் மலர் என்றால் சரிதான். எனது பிறந்த தேதி 19.08.1985 என்றால் சரிதான். நான் பிறந்த ஊர் தெரியுமா என்றால் தாதிக்குளம். நான் எந்த பள்ளியில் எத்தனாம் வகுப்பு படித்துள்ளேன் என்றால் செஞ்சி அரசு மேனிலைப்பள்ளியில் 10 ம் வகுப்பு வரை படித்துள்ளேன். எந்த வருடம் 10 ம் வகுப்பு முடித்தேன் என்றால் 2001 என்று நினைக்கிறேன். 2001 க்கு பிறகு சென்னைக்கு சென்றுவிட்டேன் என்றால் சென்னைக்கு சென்று வருவதும் போவதுமாக இருந்தேன். சென்னை அரும்பாக்கத்தில் பாலவினாயகர் தெருவில் குடியிருப்பதாக கூறும் வீடு எனக்கு சொந்தமானதா என்றால் இல்லை. வாடகைக்கு உள்ளேன். மேற்படி வீட்டில் என்னுடன் யார் வசிக்கிறார்கள் என்றால் எனது தங்கை சுதா, அவரது கணவர் மணிகண்டன் அவரது பிள்ளைகள், என் தாயார் மலர் ஆகியோர்கள் ஒன்றாக வசிக்கிறோம். மேற்படி வீட்டிற்கு மாத வாடகை எவ்வளவு என்றால் 11 ஆயிரம் என்று நினைக்கிறேன். அந்த தொகையில் 5 ஆயிரம் எனது பங்காக கொடுத்துவிடுவேன்.

3. நான் எங்கு என்ன வேலை செய்கிறேன் என்றால் சென்னையில் கூலி வேலைக்கு போவேன். என்ன கூலி வேலை என்றால் டைல்ஸ்வேலை, வாட்டர்கேன் போடும்வேலை, கேட்டரிங் வேலை எது கிடைப்பதோ செல்வேன். மாத வருமானம் எவ்வளவு சம்பாதிப்பேன் என்றால் 13 ஆயிரத்தில் இருந்து 18 ஆயிரம் வரை வேலை கிடைப்பதை பொறுத்து சம்பாதிப்பேன். என் தாயாருக்கு செலவுக்கு பணம் கொடுப்பேனா என்றால் என் தாயார் என்னுடன் இருப்பதால் அவருக்கு தேவையான உதவி நான் தான் பார்ப்பேன். என் தாயருக்கு தேவையான உணவு

வகைகளை நான் கொடுத்துவிடுவேன் என்றால் சரிதான். என் தாயாருக்கு அதிகப்படியான மருத்துவ உதவி தேவைப்பட்டால் என்னால் சமாளிக்க இயலாது என்று சாட்சி கூறுகிறார்.

4. நாங்கள் வாடகை வீட்டில் இருக்கும் வீட்டில் அனைவரும் ஒன்றாகத்தான் சமைத்து சாப்பிடுவோம் என்றால் சரிதான். சாப்பாட்டிற்கு என்று தனியாக என்னுடன் வசிக்கும் தங்கையிடம் மாதத்திற்கு எவ்வளவு தொகை கொடுப்பேன் என்றால் மாதத்திற்கு 4 ஆயிரம் ரூபாய் சராசரியாக கொடுப்பேன். 2001 முதல் சென்னையில் கூலி வேலைக்கு சென்றுவருகிறேன் என்றால் சரிதான். எனது வருமானத்தில் இருந்து தனியாக சேமிப்பு செய்துள்ளேனா என்றால் இல்லை. எனது தந்தை ராஜாமணி எந்த வருடத்தில் எங்கள் குடும்பத்தில் இருந்து வெளியேறி தனியாக இருந்து வருகிறார் என்றால் 2002 முதல் இருக்கும். நான் 10 வகுப்பு படித்தபோது என் தந்தை எங்களுடன் தான் இருந்தாரா என்றால் 10 வகுப்பு தேர்வு முடிவு வரும்வரையில் இருந்தார்.

5. 10 வகுப்பு வரை நான் படிப்பதற்கு என் தந்தைதான் செலவு செய்தார் என்றால் இல்லை. எனது பாட்டி லட்சுமி, எனது தாயார் மலர் ஆகியோர்கள் தான் என்னை பார்த்துக்கொண்டார்கள். என் தந்தைக்கு என்ன வயது நடக்கிறது என்றால் தெரியவில்லை. என் தந்தைக்கு உடல் ரீதியாக என்ன பிரச்சணை இருக்கிறது என்று தெரியுமா என்றால் தெரியாது. என் தந்தை எங்கு தங்கியுள்ளார் என்று தெரியுமா என்றால் திருவண்ணாமலையில் சொத்து வாங்கி 2 கடை நடத்தி வருகிறார். மேற்படி சொத்து வாங்கியதற்கு ஊரில் உள்ள சொத்தை விற்று வந்த பணத்தை கொண்டு வாங்கியுள்ளார். அவ்வாறு சொத்து வாங்கியதற்கு ஆவணத்தை நான் பார்த்துள்ளேனா என்றால் இல்லை. ஊரில் சொன்னார்கள். ஊரில் உள்ள சொத்தை என் தந்தை விற்பனை செய்ததற்கு ஆதாரமாக ஆவணம் எதுவும் இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் வக்கீலிடம் கொடுத்தேன்.

6. நான் கூறுவது போல் என் தந்தை ஊரில் சொத்தை விற்கவும் இல்லை, சொத்தை விற்று அந்த பணத்தை கொண்டு என் தந்தையிடம் வாங்கவும் இல்லை. நான் பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல. 2001க்கு பிறகு எனது பாட்டி லட்சுமி செலவுக்கு பணம் கொடுப்பாரா என்றால் அவருக்கு வயதாகி விட்டதால் நாங்கள் தான் அவரை பார்த்துக்கொண்டோம். 2001க்கு பிறகு என் பெயரில் இடம் ஏதேனும் கிரையம் வாங்கினேனா என்றால் இல்லை. என்னிடம் காட்டப்படும் 21.10.2020 தேதியிட்ட செஞ்சி சார்பதிவகத்தில் பதிவு செய்யப்பட்ட கிரையப்பத்திர பதவு எண்.2403/2020 என்ற கிரையபத்திரத்தின் கிரையம் வாங்குபவர் என்ற இடத்தில் சொல்லப்பட்டுள்ள தமிழ்செல்வன் என்பவர்

நான்தான் என்றாலும் கிரையம் வாங்குபவர் என்ற இடத்தில் உள்ள கையெழுத்து என்னுடையது என்றாலும் சரிதான். மேற்படி கிரையமானது எனது தங்கை என் பெயரில் கிரையம் வாங்கியுள்ளார் என்று சாட்சி கூறுகிறார். **(மேற்படி 21.10.2020 தேதியிட்ட கிரையப்பத்திர பதிவு எண்.2403/2020 ன் சான்றிட்ட கணினி பதிவிறக்க நகல் ம.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)**

7. நான் கூறுவது போல் என் தங்கையால் என் பெயருக்கு கிரையம் வாங்கித்தரவில்லை என்றால் சரியல்ல. என் தந்தைக்கு பராமரிப்பு தொகை தராமல் தவிர்ப்பதற்காக என் பெயரில் என் தங்கை வாங்கியதாக பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல. நான் கூறுவது போல் தங்கையால் என் பெயருக்கு கிரையம் வாங்கியதாக கூறுவது பினாமி தடைச்சட்டத்தின் கீழ் அது தவறு என்றால் அது சரியல்ல. நான் கூறுவது போல் கூலி வேலைக்கு செல்லவில்லை என்றால் சரியல்ல. நான் உண்மையில் கலைத்துறையில் கேமரா மேனாக வேலை பார்த்து மாதம் 50 ஆயிரம் வருமானம் ஈட்டுகிறேன் என்றால் சரியல்ல. என் தந்தைக்கு 65 வயது உள்ள நிலையிலும் இருதய நோயால் சிகிச்சை எடுத்து வருவதாலும் அதனால் என் தந்தையால் வேலைக்கு செல்ல இயலாமல் கஷ்ட ஜீவனம் வாழ்ந்து வருவதாக என் தந்தை கூறுகிறார் என்றால் சரியல்ல. என் தந்தையின் பெயரில் 5 ஏக்கர் நிலம் ஊரில் உள்ளது.

8. எனது தந்தையின் தாயாரான லட்சுமி உயிருடன் இருந்தபோது என் பெயருக்கு ஒரு உயில் ஆவணத்தின் மூலமாக லட்சுமிக்கு சேரவேண்டிய பாகத்தை தமிழ்செல்வன் ஆகிய எனக்கு அடைய வேண்டும் என்று எழுதி வைத்துள்ளார் என்றால் சரிதான். லட்சுமி அம்மாள் 3 வருடத்திற்கு முன்பு இறந்துவிட்டார் என்றால் ஆமாம். லட்சுமி அம்மாள் இறந்துவிட்ட நிலையில் அவருக்கு சேரவேண்டிய பாகம் எனக்கு சேரவேண்டியிருக்கிறது என்று நான் செஞ்சி சார்பு நீதிமன்றத்தில் இறுதிநிலை தீர்ப்பாணைக்காக நிலுவையில் உள்ளது என்றால் சரிதான். மேற்படி வழக்கில் சொல்லப்பட்டுள்ள சொத்தை தவிர வேறு சொத்துக்கள் என் தந்தை ராஜாமணிக்கு எதுவும் இல்லை என்றால் சரியல்ல. என் தந்தை பெயரில் தாதிக்குளத்தில் விவசாய நிலம் உள்ளது என்று சாட்சி கூறுகிறார். என் தந்தை பெயரில் சொத்து உள்ளது என்பதற்கு கிரையப்பத்திரம் எதுவும் இந்நீதிமன்றத்தில் நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான்.

9. பாகப்பிரிவினை வழக்கில் சம்மந்தப்பட்ட சொத்தில் யார் பயிர் வைக்கிறார்கள் என்றால் யாரோ பயிர் வைக்கிறார்கள். என் தந்தை குத்தகைக்கு விட்டிருக்கிறார். நான் கூறுவது போல் அந்த நிலத்தில் யாரும் பயிர் வைக்காமல் கரம்பாக தான் உள்ளது என்றால் சரியல்ல. நான்

மாதம் 50 ஆயிரம் வருமானம் ஈட்டுவதால் மாதம் 10 ஆயிரம் வீதம் என் தந்தைக்கு பராமரிப்பு தொகை செலுத்த நான் கடமைப்பட்டுள்ளேன் என்றால் நான் கூலிவேலை செய்கிறேன். எனக்கே போதவில்லை என்று சாட்சி கூறுகிறார். புஷ்பா என்பவருடன் என் தந்தை வாழ்ந்து வருவதாக நான் பொய்யாக பிரமாண வாக்குமூலத்தில் சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. நான் கூறுவதுபோல் என் தந்தைக்கு மதுப்பழக்கமே கிடையாது என்றால் சரியல்ல. மதுப்பழக்கம் அவருக்கு இருந்தது. நான் 10 ம் வகுப்பு படித்த பிறகு குடிப்பதில்லை. தற்போது குடிக்கிறாரா என்று தெரியவில்லை.

10. மகன் என்ற முறையில் என் தந்தைக்கு தேவையான பராமரிப்பு தொகை செலுத்த கடமைப்பட்டுள்ளேன் என்றால் எனக்கு போதிய வருமானம் இல்லை. முதன்மை வாக்குமூலத்தில் பொய்யான விவரங்களை சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. மனுவில் கோரியவாறு நான் என் தந்தைக்கு பராமரிப்பு தொகை செலுத்த வேண்டும் என்றால் எனக்கு போதிய வருமானம் இல்லை.

என்னால்/என் முன்பாக பதியப்பட்டு,
சாட்சிக்கு பொருள் விளக்கப்பட்டு/
படித்து காண்பிக்கப்பட்டு அது சரி
என அவரால் ஒப்புக் கொள்ளள்ப்பட்டது.

குற்றவியல் நீதித்துறை நடுவர்,
செஞ்சி.